தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

செவ்வாய்க் கிழமை, 1978 பிப்ரவரி 28.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

Sivakasi Division.

* 149 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to bifurcate the Sivakasi Division and to constitute one of them as Aruppukkottai Division; and

(*b*) if so, when it will be implemented?

சிவகாசி கோட்டாட்சி

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிவகாசி கோட்டாட்சிப் பகுதியை இரண்டாகப் பிரித்து, அதில் ஒன்றை அருப்புக்கோட்டை கோட்டாட்சியாக ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்) : (அ) தற்போது இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய உப கேள்வியைக் கேட்பதற்கு முன்பு தலைவர் அவர்களுடைய அனுமதியோடு ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். இப்போது காலை நேரத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குப் பதிலளிக்க 3 கேள்விகள் வைத்திருக்கிறீர்கள். அவர்களே இருந்து உறுப்பினர் களின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். முக்கியமானவையாக நிதி,

வருவாய் சம்பந்தப்பட்ட கேள்விகளாக இருக்கின்றன. அந்த அந்த இலாகா அமைச்சர்களே பதிலளிப்பது நல்லது. ஆகவே மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்; குறிப்பிட்ட இலாக்கா அமைச்சர்கள் அவைக்கு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிவகாசி கோட்டாட்சிப் பகுதியை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் மிக்க அவாவுடன் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் 5 தாலுக்காக்களும், 11 ஊராட்சி ஒன்றியங்களும் இருக்கின்றன. அதைப் பிரிப்பது நிர்வாகம் செய்வதற்கு வசதியாக இருக்கும். அந்தப் பகுதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போட்டியிட்ட தொகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போட்டியிட்டிருக்கிறார் என்பதற்காகச் செய்ய வேண்டும் என்பதல்ல. ஏற்கெனவே பல்வேறு குழுக்கள், கோட்டாட்சி வட்டங்களைப் பிரிப்பதுபற்றிப் பரிந்துரைகள் செய்திருக்கின்றன. இது போன்று கோவை மாவட்டத்திலும் ஒரு பெரிய பிரச்சினை இருக்கிறது. இதுவும் பரிசிலனையில் இருந்துகொண்டிருக்கிறது. ஒருவேளை இந்தக் கருத்தையும் பரிசீலிக்க வேண்டுமென்றால், தேவையின் அடிப்படையில் பரிசீலனை செய்வதற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு முன்னவர் அவர்கள், மாவட்டங்களைப் பிரிப்பதுபற்றி இப்போது சொன்னார்கள். பெரிய மாவட்டங்களாக இருப்பவைகளைப் பிரிப்பதை அரசு பரிசிலனை செய்ய இருக்கிறதா? பெரிய மாவட்டங்களின் பகுதிகளைப் பிரித்து சிறு மாவட்டங்களுடன் சேர்த்து அந்த மாவட்டங்களின் எல்லையை விஸ்தரிக்கும் திட்டம் இருக்கிறதா? குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில், சேரன்மகாதேவி சப்-டிவிஷனைச் சேர்க்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதைப்பற்றியும் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மூலக்கேள்வி, சிவகாசி கோட்டாட்சிப் பகுதி பற்றிய கேள்வி. மூன்றாவது கேள்வியாக முகவை மாவட்டம் சம்பந்தப்பட்ட கேள்வியும் இருக்கிறது. மாண்புமிகு தலைவர் அவர்கள் அனுமதித்தால், முகவை மாவட்டம் பற்றியும் சேர்த்துப் பேசலாம் என்று நினைக்கிறேன்.

1978 பிப்ரவரி 28]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அந்தக் கேள்வி இன்னும் கொஞ்ச தூரத்தில் இருக்கிறது. தனியாகவே எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்தக் கேள்வி சிவகாசி கோட்டாட்சியைப் பற்றியதாக இருக்கிறது. ஆகவே இதைப்பற்றித் தனிக் கேள்வி போட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Ownership Rights to Cultivating Tenants.

*150 Thiru K. S. GANAPATHI (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have any proposal to confer ownership rights on the cultivating tenants?

நிலத்தைப் பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு உடைமையுரிமை.

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்---

நிலத்தைப் பயிரிடும் குத்தகைதாரர்களுக்கே நிலத்தின் உடைமை யுரிமையை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்) : இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக, தமிழக அரசு டெனன்ட்ஸ் பர்சேஸிங் ரைட்ஸ்பற்றி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அதைக் கூட்டு ஆய்வுக் குழுவிற்கு பரிசீலனை செய்து பரிந்துரை செய்ய விட்டது. அதன் முடிவு அரசுக்கு வந்துள்ளது. அந்தச் சட்டத்தை மாற்ற அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : முந்தைய ஆட்சியில் குத்தகை தாரர்கள் நில உடைமை சம்பந்தமாக ஏற்கெனவே சட்ட மன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதி அவர்களுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டபோது, ரிலிஜியஸ் இன்ஸ்ட்டிடியுஷனை, சாரிட்டபிள் இன்ஸ்ட்டிடியுஷனைச் சேர்ந்தவர்கள் எல்லாம் வேண்டுகோள் விடுத்தார்கள். ஆகவே அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று திருப்பி அனுப்பினார்கள். அது ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. தற்போது, இப்பிரச்சினை பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.